முற்பகல் 10—35

அங்கன்வாடி மையங்கள் அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், மாவட்ட ஆட்சித் தலைவருடைய discretionary fund*–லிருந்தும் நிதியை ஒதுக்கலாம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து எந்தெந்த பகுதிகளில் நீங்கள் ஒதுக்கீடு செய்ய முடியுமோ அங்கெல்லாம் ஒதுக்கீடு செய்யலாம் என்பதை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு குழந்தைகளினுடைய நலன் காக்கும் அரசு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்தக் கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

25—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***850—திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எழும்பூர் தொகுதி, 77–வது வார்டு, கேசவபிள்ளை பூங்காவிலுள்ள தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2017 ஜூன் 16]

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் சென்னை எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 77–வது வார்டு, கேசவபிள்ளை பூங்கா திட்டப் பகுதியில் சிதிலமடைந்த குடியிருப்புகளை இடித்து புதிய 672 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வசதி செய்யப்படவில்லை. இதுகுறித்து சென்னை குடிநீர் வழங்கல் வாரியத்துடன் ஆய்வு மேற்கொண்டு, அரசின் ஒப்புதல் பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல அந்தப் பகுதியிலே சிதிலமடைந்துள்ள 864 குடியிருப்புகளை இடித்துவிட்டு, மீண்டும் புதிய குடியிருப்புகள் ரூ.72 கோடியே 28 இலட்சம் செலவில் மைய மற்றும் மாநில அரசின் நிதி ஆதாரங்களுடன் கட்டப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே, இத்திட்டப் பணிகளுக்காக மைய அரசினுடைய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகளினுடைய தற்போதைய வடிவமைப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சேர்க்கப்படவில்லை. எனவே, அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவி பெற்று மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கான பணிகள், குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் செயல்படுத்தப்படும்போது மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மட்டுமின்றி, இந்திய வரலாற்றில் மட்டுமின்றி, உலக வரலாற்றை எடுத்துக்கொண்டால், தொடர்ந்து 60 ஆண்டுகள் ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சாதனை சரித்திரத்தைப் படைத்து, இன்று வைர விழா நாயகராகத் திகழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் தலைவர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் அந்த வைர விழா நாயகருக்கு இந்திய துணைக் கண்டமே திரும்பிப் பார்க்கக்கூடிய அளவிற்கு ஒரு விழாவினை எடுத்து, இந்திய துணைக் கண்டத்தைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்ற எங்கள் கழகத்தின் செயல் தலைவர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களை வாழ்த்தி வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கேசவபிள்ளை பூங்கா பகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 14 பிளாக்குகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 35 பிளாக்குகள் அந்த கேசவபிள்ளை பூங்காவிலே உள்ளன. அந்த 14 பிளாக்குகளும் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கட்டி முடிக்கப்பட்டு, இந்த ஆட்சியில் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், அப்படி திறந்து வைக்கப்பட்ட 14 பிளாக்குகளும் தற்போது பராமரிப்பு இல்லாமல் சிதிலமடைந்து இந்த மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே அந்த வீட்டிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுநீர் அந்த வீட்டிலேயே தேங்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. மீதமுள்ள 21 பிளாக்குகளில் 7 பிளாக்குகள் இடிக்கப்பட்டு ஏறக்குறைய 4 மாத காலங்களாகியும் அந்த இடத்தில் இன்னும் பணிகள் தொடங்கப்படவில்லை. இன்னும் 14 பிளாக்குகள் இடிக்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. ஆகவே, உடனடியாக மீதமுள்ள அனைத்து பிளாக்குகளையும் இடித்து அவற்றைக் கட்டுவதற்குண்டான கால அளவு எவ்வளவு, அதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு, அதன் வரைபடங்கள் போன்ற விவரங்களை அந்தப் பணிகள் நடைபெறக்கூடிய இடங்களிலே இந்த அரசு வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–40

அதேபோல், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 77–வது வார்டில் பி.கே. காலனி, 104–வது வார்டிலுள்ள ஆர்.கே. புரம், 61–வது வார்டிலுள்ள டாக்டர் சந்தோஷ் நகர், 107–வது வார்டிலுள்ள எம்.எஸ். நகர் போன்ற அனைத்து குடிசை மாற்று வாரிய வீடுகளுமே ஏறக்குறைய 45 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, அனைத்தும் தற்பொழுது வாழ்வதற்கே வசதியில்லாமல் சிதிலமடைந்து, அந்த இடத்தில் கழிவுநீர் தேங்கியுள்ள நிலையில் அந்தக் குடியிருப்புகள் உள்ளன. அனைத்துக் குடியிருப்புகளையும் சேர்த்து ஏறக்குறைய 90 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் மிகவும் பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிப்பதால், அந்த இடங்களை அரசு கவனத்தில் கொண்டு, பராமரிப்புப் பணிகளை உடனடியாக மேற்கொண்டு, அந்த மக்களுக்கு உரிய வசதிகளை செய்ய வேண்டும். பெரிய வசதிகளைச் செய்யாவிட்டாலும்கூட, குறைந்தது வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளையாவது இந்த அரசு செய்து கொடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2017 ஜூன் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ஏறத்தாழ 4,546 குடிசை மாற்று வாரிய வீடுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்குள்ள பல பகுதிகளில் இருக்கின்ற வீடுகளின் நிலைமை குறித்து இங்கே எடுத்துரைத்தார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசைப் பொறுத்தவரையில், அனைவருக்கும் சுகாதாரமான வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதில் இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகம்தான் முதன்மை இடத்தில் இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஏழை, எளியோருக்கு Vision 2023 *என்ற திட்டத்தை உருவாக்கி, 2023 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னார்கள். அதன்படி, 2016 ஆம் ஆண்டு இதே சட்டமன்றப் பேரவையில் 10 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்ற உன்னதமான திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், குடிசை மாற்று வாரியத்தின்மூலம் மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் 3,16,600 வீடுகள் கட்டுவதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இந்திய துணைக் கண்டத்திலேயே குடிசை மாற்று வாரியத்தில் தமிழகம்தான் முதன்மை மாநிலம் என்ற சிறப்பைப் பெற்றிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பல்வேறு இடங்களில், பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவரே இந்தப் பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, அதற்கான நிதியையும்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ள பழைய வீடுகளை இடித்துவிட்டு புதிய வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே, கேசவபிள்ளை பூங்கா பகுதியில் 864 வீடுகள் கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டு, தற்போது ஏறத்தாழ 72 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் அந்த வீடுகள் கட்டப்பட இருக்கின்றன என்பதை முதலிலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்த மற்ற பகுதிகளிலும் குடிசை மாற்று வாரியத்தின் பொறியாளர்களை அனுப்பி, ஆய்வு செய்து, எங்கெல்லாம் உடனடியாக பணிகள் தேவைப்படுகின்றதோ அங்கெல்லாம் அப்பணிகளை துறையின் மூலமாக செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேசவபிள்ளை பூங்காவில் தற்போது இடிக்கப்படும் வீடுகளில் வசிக்கும் வாடகைதாரர்களுக்கு அரசின் சார்பாக ரூ.8,000/– வழங்கப்படுகிறது. அந்த வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு 2 ஆண்டு கால அவகாசம் தேவைப்படும். அதுவரை ரூ.8,000/–ஐ வைத்துக்கொண்டு சமுதாயத்தில் பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வேறு இடங்களுக்குச் சென்று அவர்களால் வாழ்க்கையை நடத்த முடியாது. ஆகவே, குடிசை மாற்று வாரிய வீடுகள் இடிக்கப்படும்பொழுது, அவற்றுக்கான புதிய வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரை, அந்த வாடகைதாரர்களுக்கு மாதந்தோறும் ரூ.2,000/– கூடுதலாக இந்த அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதற்குண்டான தொகையை அத்தகைய வீடுகள் கட்டுவதற்கான திட்ட மதிப்பீட்டிலேயே சேர்த்து வழங்கினால் அவர்களுக்கு வசதியாக இருக்கும்.

அதேபோல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்கள் தங்கியிருந்த வீடுகள் இடிக்கப்படும்பொழுது, அவர்கள் தங்க வைக்கப்பட்ட இடங்களில் ஒவ்வொரு குடும்பமும் 75 சதுர அடிக்குள் வாழக்கூடிய அவல நிலை இருந்தது.

2017 ஜூன் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரவிச்சந்திரன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். நேரமில்லை. இன்னும் நிறைய வினாக்கள் இருக்கின்றன.*

முற்பகல் 10–45

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *ஆகவே, அங்கு வாழக்கூடிய மக்களுக்கு குறைந்தது 200 சதுர அடியிலாவது வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டும். இந்த அரசாங்கத்தால் வீடுகள் கட்டி முடிக்கப்படும்வரை அவர்களுக்கு மாதந்தோறும் கூடுதலாக 2,000 ரூபாய் வழங்கப்பட வேண்டும். அதேபோல், 104–வது வட்டத்தில் உள்ள திடீர் நகரில் உள்ள வீடுகள், குடிசைகளாக இருந்தபோது எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் துணை முதல்வராக இருந்தபோது, அவர்களுக்கு கல்நார் வேய்ந்த வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அதற்குப் பின்புறம் மாநகராட்சிக்கு சொந்தமான ஏறக்குறைய 12 ground இடம் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதனை, அந்தப் பகுதி மக்கள் திறந்தவெளி கழிப்பிடமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். திடீர் நகர் பகுதியில் வாழக்கூடிய மக்களுக்கு உடனடியாக குடிசைமாற்று வாரியம் ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பினைக் கட்டித் தருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது ஏற்கெனவே வசித்து வருகின்றவர்கள், மாற்று இடங்களுக்குச் செல்கின்றபோது அவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுபற்றியெல்லாம் கலந்து ஆலோசித்து, அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசைப் பொறுத்தவரை, இந்த அரசு ஏழையெளியவர்களுடைய நலன் காக்கின்ற அரசு. ஆகவே, ஏழையெளியவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்துதான்*

இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, 104–வது வார்டிலே இருக்கின்ற 168 குடியிருப்புகளைப் பற்றி இங்கே எடுத்துரைத்தார்கள். அந்த 168 குடியிருப்புகளும், தொழில்நுட்பக் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு, அந்தக் குழு, அந்தப் பகுதியில் இருக்கின்ற வீடுகள் இடித்து கட்டப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கின்றது. அதன்மீதும் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

26—

தீக்காய சிகிச்சைப் பிரிவு

***7893—திரு. எதிர்க்கோட்டை எஸ்.ஜி. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தூர் தொகுதி, வெம்பக்கோட்டையில் தீக்காய சிகிச்சைப் பிரிவுடன் மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அடுத்த கேள்விக்குச் சென்று விட்டேன், உட்காருங்கள். அடுத்த கேள்வியின்போது பார்க்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மணி 10–47 ஆகின்றது. இன்னும் 5 கேள்விகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்)